REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 12 | செய்தி: 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :123 பங்குனி 16ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 29 மார்ச் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

# இலங்கையில் முதல் பலி!

## பொதுமக்களிடையே பெரும் அச்சநிலை!!

கொழும்பு, மார்ச் 29

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி கொழும்பு அங்கொடை தேசிய தொற்று நோயியல் மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த ஒருவர் நேற்றிரவு உயிரிழந்துள்ளார். கொரோனா வைரஸ் தாக்கத்துக்குள்ளாகி இலங்கையில் உயிரிழந்த முதலாவது நபர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

02

## ஊரடங்கு கைது 5 704

கொழும்பு, மார்ச் 29

ஊரடங்குச் சட்டத்தை மீறிய 5 ஆயிரத்து 704 பேர், 20ஆம் திகதி மாலை 6 மணிமுதல் நேற்று மாலை 6 மணி வரை நாடு முழுவதிலும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

அத்துடன், ஆயிரத்து 427 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்று மதியம் 12 மணி முதல் மாலை 6 மணியுடன் நிறைவடைந்த 6 மணிநேரத்தில் மாத்திரம் 318 பேர்

02

## வதந்தி பரப்பியவர் பொலிஸாரால் கைது

கொழும்பு, மார்ச் 29

சமூக வலைத்தளங்களில் கொரோனா வைரஸ் தொற்றுத் தொடர்பான போலித் தகவல்களைப் பரப்பிய குற்றச்சாட்டில், களுபோவிலவைச் சேர்ந்த 38 வயதுடைய நபரொருவரை குற்றப் புலனாய்வுத் துறையினர், குருநாகலில் வைத்து நேற்றுக் கைதுசெய்துள்

02

## நகர சபை உறுப்பினர் மூவர் கைது

கொடிகாமம், மார்ச் 29

ஊரடங்கு நேரத்தில் நடமாடுவதற்கு, பொலிஸாரால் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரம் முடிவடைந்த நிலையில், வாகனத்தில் சென்ற நகர சபை உறுப்பினர்கள் மூவர் கொடிகாமம் பொலிஸாரால் நேற்றுச் சனிக்கிழமை பிற்பகல் கைது செய்யப்பட்டனர்.

கொடிகாமம் கச்சாய் பகுதியில் உணவுத் தேவையுடைய குடும்பங்களுக்கு உலர் உணவு பொருள்கள் வழங்கச் சென்ற போது, இவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் பயணித்த வாகனமும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

02

## வவுனியாவில் சிக்கிய நகைக் கொள்ளையன்

வவுனியா, மார்ச் 29

வவுனியாவில் மோட்டார் சைக்கிள் இலக்கத்தகட்டை அடிக்கடி மாற்றி , தனிமையில் செல்லும் பெண்களின் நகைகளைக் கொள்ளையடித்து வந்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா கற்குளம் பகுதியைச் சேர்ந்த 25வயதுடைய இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் நடத்திய விசாரணையின் மூலமாக 4 லட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் கைப்பற்றப்பட்டன. பல்சர் ரக மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டது. மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர் நீதிவானிடம் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(த–18)

## கொரோனா 113

நேற்று எழுவர் அடையாளம்



படங்கள் சொரூபன்

## ஊரடங்கை கட்டுப்படுத்த இராணுவம் களமிறக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

ஊரடங்குச் சட்டத்தை இறுக்கமாக நடைமுறைப்படுத்துவதற்காக பொலிஸாருடன் இணைந்து இராணுவத்தினரும் களமிறங்கியுள்ளனர். வடக்கின் பல்வேறு பகுதிகளிலும் இராணுவத்தினர் களமிறக்கப்பட்டிருந்தனர். அத்துடன் அத்தியாவசிய சேவையிலுள்ளோர் தவிர்ந்த ஏனையோர் பயணம் செய்ய அனுமதிக்கப்படவில்லை.

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக கடந்த 20ஆம் திகதி பி.ப. 6 மணியிலிருந்து ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படு

02

## கொடிகாமத்தில் கைதான 26 பேருக்கு சரீர பிணை

கொடிகாமம், மார்ச் 29

ஊரடங்கு நேரத்தில் தோட்டத்துக்குச் சென்ற விவசாயிகள் உட்பட கைது செய்யப்பட்ட 26 பேர் சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

26 பேரும் நேற்றுச் சனிக்கிழமை பிற்பகல் சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை சரீரப் பிணையில் விடுவிக்க உத்தரவிட்ட நீதிவான், இவர்கள் மீதான வழக்கை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

02

## உணவுத் தட்டுப்பாடு விரைவில் ஏற்படலாம்

கொழும்பு, மார்ச் 29

கொரோனா வைரஸ் பரவலை அடுத்து எதிர்வரும் காலங்களில் நாட்டில் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் அச்சுறுத்தல் உள்ளதாகவும் ஆகவே தேசிய உணவு உற்பத்தியை அதிகரித்து அடுத்து வரும் காலங்களில் உணவுத் தேவையை பூர்த்திசெய்ய

02

## உலர் உணவு விநியோகம் பிரதேச செயலகங்களிடம்!

யாழ்ப்பாணம், மார்ச் 29

சமுர்த்திப் பயனாளிகளுக்குரிய உலர் உணவுப் பொதிகளுக்குரிய பொருள்களைப் பெற்றுக் கொள்ள முடியாமையால், அந்தப் பணிகளை ஒவ்வொரு பிரதேச செயலகங்களையும் முன்னெடுக்குமாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் அறிவுறுத்தி

02

## சமுர்த்திக் கடன் அரசு திருகுதாளம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

கொரோனா நிவாரணமாக சமுர்த்திப் பயனாளிகளுக்கு 10 ஆயிரம் ரூபா கடன் மற்றும் உலர் உணவுப் பொருள் விநியோகத்தில் அரசு மேற்கொண்ட திருகுதாளம் அம்பலமாகியுள்ளது. சமுர்த்திப் பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளதாகச் சொல்லப்

02

## இந்தியாவிலிருந்து வந்தோர் உடன் தனிமைப்படுத்தலில்!

கொழும்பு, மார்ச் 29

இந்தியாவிலிருந்து இம்மாதம் 15ஆம் திகதிக்குப் பின்னர் நாடு திரும்பிய அனைவரையும் உடனடியாகத் தனிமைப்படுத்தல் நடவடிக்கையில் ஈடுபடுமாறு அரசு அவசர கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தியாவிலிருந்து இம்மாதம் 15 ஆம் திகதி நாடு திரும்பிய கண்டி, அக்குர

02

## ஊரடங்கு...

கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
அத்துடன், நேற்று மட்டும் 69 வாகனங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளனவென பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. (அ)

## இலங்கையில்...

60 வயதுடைய குறித்த நபர் மாரவில பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும், இவர் வெளிநாட்டவர்களுக்கான சுற்றுலா வழிகாட்டியாகச் செயற்பட்டிருந்தார் எனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.
நீரிழிவு மற்றும் இரத்த அழுத்தத்தால் அவர் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருந்தார் எனவும் அவர் குறி ப்பிட்டார்.
கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான முதலாவது இலங்கையர் இந்த மாதம் 11ஆம் திகதி அடையாளம் காணப்பட்டிருந்தார். 18 நாள்களின் பின்னர் இலங்கையில் முதலாவது உயிரிழப்பு பதிவாகியுள்ளது.
கொரோனா வைரஸ் தொற்றுக்கு முதல் உயிரிழப்பு பதிவான சம்பவம் இலங்கை மக்களிடையே பெரும் அச்சத்தை தோற்றுவித்துள்ளது. (ஒ.5,22)

## சமுர்த்தி...

படும் 10 ஆயிரம் ரூபா கடன் தொகைக்குள்ளேயே அவர்களுக்கான உலர் உணவுப் பொதி விநியோகமும் உள்ளடங்கியுள்ளதாகத் தெரியவருகின்றது.
கொரோனா வைரஸ் தாக்கத்தையடுத்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ நிவாரணப் பொதியை அறிவித்திருந்தார். அதில் சமுர்த்திப் பயனாளிகளுக்கு 10 ஆயிரம் ரூபா இலகு கடனாக வழங்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தார்.
இந்தக் கடன், சமுர்த்திப் பயனாளிகளின் கட்டாய சேமிப்பை பிணையாக வைத்தே வழங்கப்படவுள்ளது. அதிலும் 5 ஆயிரம் ரூபாவே முதல் கட்டமாக வழங்கப்படவுள்ளது. அந்தக் கடனுக்கு வட்டி அறவிடப்படமாட்டாது. 12 மாதங்களுக்குள் அதனைச் செலுத்த வேண்டும்.
இதேவேளை சமுர்த்திப் பயனாளிகளுக்கு அங்கத்தவர் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆயிரத்து 500 ரூபா, 2 ஆயிரத்து 500 ரூபா, 3 ஆயிரத்து 500 ரூபா உலர் உணவுப் பொருள்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்தப் பொதிகள் இலவசமாக வழங்கப்படாது என்றும், 10 ஆயிரம் ரூபா இலகு கடனில் உலர் உணவுப் பொதிக்குரிய பெறுமதி கழிக்கப்படும்எனவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.
அரசு நிவாரணம் வழங்குவதாக கூறிக் கொண்டாலும் உண்மையில் சமுர்த்திப் பயனாளிகளின் பணத்தையே அவர்களுக்கு வழங்கும் நடவடிக்கையை மேற்கொண்டு, ஏமாற்றியுள்ளதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ.5)

## வதந்தி...

ளனர். போலியான தகவல்களை மக்கள் மத்தியில் பரப்புவதனூடாக வேண்டாத பிரச்சினைகளை உருவாக்கினார் என்ற குற்றச்சாட்டிலேயே மேற்படி நபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரை கொழும்பு புதுக்கடை நீதிமன்றில் இன்று ஆஜர்படுத்த, குற்றப் புலனாய்வுத் துறையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர் என பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது. (அ)

## உணவுத்...

வேண்டியுள்ளதாகவும் அரசு தெரிவிக்கின்றது. அதற்கேற்ப தேசிய உணவு உற்பத்தியை அதிகரிக்க அரசு துரித நடவடிக்கைகளை முன்னெடுப்பதாவும் கூறுகின்றது.
உலகளாவிய ரீதியில் கொரோனா வைரஸ் பரவலின் தாக்கம் அதிகரித்து வருகின்ற நிலையில் இலங்கை உள்ளிட்ட சகல நாடுகளுக்கும் உணவு தட்டுப்பாடு ஏற்படக்கூடிய நிலைமை உருவாகியுள்ளதாக ஐக்கிய நாடுகளின் சுகாதார பணிப்பகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.
சகல நாடுகளும் தமக்கான உணவு சேமிப்பில் அதிக அக்கறை செலுத்தி வருகின்ற நிலையில் இந்த உணவு பற்றாக்குறையின் தாக்கமானது ஐரோப்பிய நாடுகளை அதிகம் பாதிக்கும் எனவும் சர்வதேச கண்காணிப்பு அமைப்புகள் அறிவுறுத்தியுள்ளனர்.
இந்நிலையில் இலங்கையின் இதற்கான மாற்று நடவடிக்கைகள் என்னவென வினவியபோதே பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன இதனைத் தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலு கூறுகையில்,
இப்போது உலகளாவிய ரீதியில் பரவிவரும் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக இலங்கை உள்ளிட்ட உலகின் அனைத்து நாடுகளிலும் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் நிலைமை உருவாகியுள்ளது. சர்வதேச அமைப்புகள் தொடர்ச்சியாக இதனை அறிவுறுத்தி வருகின்றனர். சகல நாடுகளிலும் ஏற்றுமதி, இறக்குமதி முற்று முழுதாக தடைப்பட்டுள்ள நிலையில் நாம் அனைவரும் இப்போது மாற்று வேலைத்திட்டங்களை கையாள வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.
எனினும் இலங்கையர்களாக நாம் இன்றும் தேசிய விவசாய உற்பத்திகளில் ஈடுபட்டு வருகின்ற காரணத்தினால் எம்மால் பெரிய சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படப்போவதில்லை. ஆனபோதிலும் முன்னெச்சரிக்கையாக தேசிய உணவு உற்பத்தி குறித்து கவனம் செலுத்த வேண்டியுள்ளது.
இப்போ தும் ஜனாதிபதி தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள பொருளாதார நிபுணர் குழு தேசிய உணவு உற்பத்தியை பலப்படுத்த வேண்டிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். அடுத்து வரும் இரண்டு அல்லது மூன்று மாதங்களில் தேசிய உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய நிதி மற்றும் பொருள் உதவிகளை வழங்க அரசு தயாராக உள்ளது.
விவசாயிகள் மீண்டும் இந்த நாட்டில் பலமடையக்கூடிய விதத்தில் தமது உற்பத்திகளை முன்னெடுக்க முடியும். அதற்கான காலமாகவும் இது மாற்றம் பெற்றுள்ளது. ஆகவே இலங்கையில் சகல பகுதிகளிலும் விவசாயிகள் தமது உற்பத்திகளில் ஈடுபட முடியும். வடக்கு கிழக்கில் அவர்களின் பிரதான உற்பத்திகள் எதுவோ அதற்கான வேலைத்திட்டங்களும், தெற்கில் முன்னெடு க்கக்கூடிய விவசாய பயிர்ச்செய்கைகளுக்கு ஏற்ற வேலைத்திட்டமும் மலையக பிரதேசங்களின் உற்பத்திகளுக்கு மாற்று வேலைத்திட்டமும் என நாடளாவிய ரீதியில் தேசிய விவசாயத்தைப் பலப்படுத்தும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார். (ஒ.5)

## உலர்....

யுள்ளது.
76 ஆயிரம் சமுர்த்திப் பயனாளிகளுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டன. அவர்களுக்கு 1, 500 ரூபா, 2 ஆயிரத்து 500 ரூபா, 3 ஆயிரத்து 500 ரூபா பொதிகள் வழங்கப்படஇருந்தன.
அரிசி, மா, சீனி, பருப்பு, ரின் மீன் என்று பல்வேறு பொருள்கள் அதில் அடங்கியிருந்தன. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக இதனை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டது. ஆயினும் அரசின் நிர்ணய விலையில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடமோ, தனியாரிடமோ அதனைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை.
இதனையடுத்து ஒவ்வொரு பிரதேச செயலகங்களும், தத்தமது பகுதியிலுள்ள தனியார் அல்லது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் நியாய விலையில் பொருள்களைப் பெற்று விநியோகிக்க அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. இதனால் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் வழங்கப்படும் பொருள்கள் மற்றும் அதன் அளவுகள் வெவ்வேறாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

## நகர சபை...

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த போது, நடமாடியதால் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று கொடிகாமம் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது. இவர்கள் நீதிவான் முன்னிலையில் இன்று நிறுத்தப்படுவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (க159)

## கொடிகாமத்தில்...

கொடிகாமம் நகரப் பகுதியில் கிராமங்களில் உட்பகுதியில் ஊரடங்கு நேரத்தில் தோட்டத்துக்குச் சென்ற விவசாயிகள் உட்பட 26 பேர் கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.
நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலையும், நேற்றுச் சனிக்கிழமை காலையும் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.
வைத்தியசாலைக்குச் சென்றவர்கள், வீட்டுக்கு அருகில் உள்ள காணிக்குச் சென்றவர்கள், தோட்டத்துக்குச் சென்ற விவசாயிகள் மற்றும் நடமாடும் சேவைக்கு மரக்கறிகள் வழங்குவதற்காக சென்றவர்கள், கிராம மக்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.
கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர்கள், சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்ட போதே, அவர்கள் சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.(க159)

## ஊரடங்கை...

த்தப்பட்டு வருகின்றது. கடந்த செவ்வாய்க்கிழமை குடாநாடு உள்ளிட்ட வடக்கு மாகாணம் முழுவதும் ஊரடங்கு நீக்கப்பட்டது. இருப்பினும் யாழ்ப்பாணத்தில் அதன் பின்னர் மறு அறிவித்தல் வரும் வரை ஊரடங்கு அறிவிக்கப்பட்டது.
இதனால் மருந்தகங்கள், பலசரக்குக் கடைகள் என்பன திறக்க அனுமதிக்கப்பட்டு மக்கள் கால்நடையாகச் சென்று பொருள்கள் கொள்வனவு செய்ய அனுமதிக்கப்பட்டது.
பெருமளவில் மக்கள் நடமாடத் தொடங்கியதையடுத்து பலசரக்குக் கடைகள், பல்பொருள் அங்காடிகள், தனியார் மருந்தகங்கள் என அனைத்தையும் மூடுவதற்கு பணிக்கப்பட்டது.
ஊரடங்குச் சட்டம் இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்படும் என்று அரசு அறிவித்தது. பொலிஸாருக்கு உதவியாக இராணுவத்தினரும் களமிறக்கப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டது.
இதற்கமைய வடக்கின் பல்வேறு பகுதிகளிலும் பொலிஸாருடன் இணைந்து இராணுவத்தினர் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அத்தியாவசிய சேவையிலுள்ளோர் தவிர ஏனையோர் வீதிகளில் பயணம் செய்ய அனுமதிக்கப்படவில்லை.
அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர். சில இடங்களில் பொலிஸார் தடியடி நடத்தினர். அத்துடன் பெருமளவானோர் கைதும் செய்யப்பட்டனர். (ஒ.5)

## இந்தியாவில்...

ணையைச் சேர்ந்த ஒருவர் நேற்று கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு கொழும்பு அங்கொடை தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இவர் இந்தியாவில் இருந்து வந்தமை தொடர்பில் சுகாதார மற்றும் பாதுகாப்புப் பிரிவுகளுக்கு முன்னர் அறிவிக்கவில்லை என்றும், தனிமைப்படுத்தலில் ஈடுபடவில்லை எனவும் கூறப்படுகின்றது.
இந்நிலையில், இந்தியாவிலிருந்து இம்மாதம் 15ஆம் திகதிக்குப் பின்னர் நாடு திரும்பிய அனைவரும் உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களில் பதிவுகளை மேற்கொண்டுவிட்டு தனிமைப்படுத்தல் நடவடிக்கையில் ஈடுபடுமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்தியர் அனில் ஜாசிங்க கேட்டுக்கொண்டுள்ளார். (ஒ.5,22)

# ஆள் கடத்தலில் ஈடுபட வேண்டாம்!

## வடக்கு மீனவர்களுக்கு கடற்படைத் தளபதி எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச் 29

வட பகுதியில் அதிகளவான மக்கள் மீன்பிடித் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டு செயற்படுவதால், ஊரடங்கு வேளையிலும் மீன்பிடிப்பதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்கியுள்ளோம். அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஆள் கடத்தலில் ஈடுபடக் கூடாது என்று இலங்கைக் கடற்படைத் தளபதி ரியல் அட்மிரல் டி சில்வா வடக்கு மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வட பகுதியிலிருந்து கடலுக்குச் செல்லும் மீனவர்கள், உங்கள் வாழ்வாதாரத்துக்கான மீன்களைப் பிடித்துக் கொண்டு கரை திரும்பினால் நல்லது. அதை விடுத்து சட்ட விரோதமான முறையில் இந்தியாவிலிருந்து வருபவர்களை அல்லது இந்தியாவுக்குச் செல்பவர்களை ஏற்றி இறக்கும் தொழிலில் ஈடுபடுவதை அனுமதிக்க முடியாது.

வடக்குக் கடலில் மீன்பிடித் தொழிலுக்குச் செல்லும் மீனவர்கள் அவதானத்துடன் தொழிலில் ஈடுபடவும். தற்போது கொரோனா தாக்கம் ஏனைய நாடுகளிலும் அதிகரித்துள்ள நிலையில், கடற்படையினரும், விமானப்படையினரும் இணைந்து இலங்கையின் சகல கடற்கரையோரங்களிலும், கடலிலும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

வேறு நாட்டில் இருந்து இங்கே கடல் வழியாகவும் தப்பி வருவார்கள். தற்போது விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளமை அவர்களுக்குப் பாதகமாக அமையலாம். எனவே இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கடல் வழியாக வேறு நாட்டவர்கள் சட்ட விரோதமாக இங்கே வர முடியும். இதனால் வேறு நாட்டவர்கள் நமது மீனவர்களைப் பயன்படுத்தி நாட்டுக்குள் வர முயற்சிப்பார்கள். அதற்கு இடம் கொடுக்காதீர்கள். நமது நாட்டை நாமே காப்பாற்ற வேண்டும். குறிப்பாக வடபகுதி கடற்கரை ஓரங்களில் மேலதிக பாதுகாப்பை உறுதிப்படுத்தவுள்ளோம். எனவே இதனைக் கருத்தில் கொண்டு வட பகுதி மீனவர்கள் மிகவும் அவதானமாகச் செயற்படவும்- என்றார். (க-111)

## கொரோனா அச்சத்தால் 56 கைதிகள் விடுதலை

சிறு குற்றங்களை புரிந்த குற்றச்சாட்டில் நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 56 கைதிகள், நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர். சிறைச்சாலைக்குள் கொரோனா வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்தும் வகையிலேயே, இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சிறைச்சாலை ஆணையாளரின் வழிகாட்டலில், நீர்கொழும்பு பிரதான நீதவான் ரஜீந்ரா ஜயசூரியவின் உத்தரவுக்கமைய, இந்த வாரத்தில் மொத்தமாக 170 கைதிகள் இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனரென, நீர்கொழும்பு சிறைச்சாலை அதிகாரி ஆர். டப்ளியூ. டப்ளியூ சம்பாவோ தெரிவித்தார்.

பிணை வழங்கப்பட்டுள்ள கைதிகள், பிணை வழங்கப்பட்டு பிணையில் செல்ல வசதியில்லாத கைதிகள், இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

விடுதலை செய்யப்பட்ட கைதிகள் அவர்கள் வசிக்கும் பிரதசங்களில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு சிறைச்சாலை வாகனங்களில் அழைத்துச் செல்லப்பட்டு விடுவிக்கப்பட்டனர். (அ)

## இலங்கைக்கு 25கோடி ரூபா

### கொரோனா அழிப்புக்காக அமெரிக்கா வழங்கியது

கொழும்பு, மார்ச் 29

கொரோனா அழிப்பு நடவடிக்கைக்காக இலங்கைக்கு சுமார் 25 கோடி ரூபாவை வழங்குவதற்கு முன்வந்துள்ளது அமெரிக்கா.

சீனாவின் வுகான் மாகாணத்தில் கடந்த டிசெம்பர் மாதம் தோற்றம் பெற்ற கொரோனா வைரஸ், உலகின் 195 நாடுகளுக்குத் தற்போது பரவியுள்ளது. சுமார் 6 லட்சம் மக்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். இத்தாலியில் அதிகளவான உயிரிழப்புக்கள் பதியப்பட்டுள்ளன. அமெரிக்காவில் ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் கொரோனா அழிப்பு நடவடிக்கையில் கடும் முனைப்புக்காட்டி வருகின்றது அமெரிக்கா. சுமார் 65 நாடுகளுக்கு கொரோனா அழிப்பு நடவடிக்கைகளுக்காக அமெரிக்கா உதவியும் செய்துள்ளது. அந்த வகையில் இலங்கைக்கு சுமார் 25 கோடி ரூபாவை (இலங்கை மதிப்பில்) அமெரிக்கா வழங்கியுள்ளது. (ம)



## அதிகாரிகள் மீனவர்கள் முறுகல்; மாத்தளனில் 9 மீனவர்கள் கைது

முல்லைத்தீவு கடற்கரையில் மீனவர்களுக்கும் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளுக்கும் இடையே முறுகல் ஏற்பட்டிருந்த நிலையில், ஊரடங்கு வேளையில் சட்டவிரோத முறையில் கடற்றொழிலில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினர் அவர்களைக் கைது செய்து முல்லைத்தீவுப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஊரடங்குசட்டம்நடைமுறையில்இருந்தவேளை முல்லைத்தீவு மாத்தளன் பகுதி மீனவர்களுக்கும் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் பிற்பகல் முறுகல் ஏற்பட்டுள்ளது.

மாத்தளன் பகுதி மீனவர்கள் நேற்று முன்தினம் கடற்றொழிலுக்குச் சென்று அதிகளவான மீன்களைப் பிடித்துவந்துள்ளனர். இவர்களில் கடலுக்கு சென்ற 5 படகுகளில் இரண்டு படகுகள் மீன்களுடன் கரைதிரும்பிய நிலையில் குறித்த மீன்கள் சட்டவிரோதமான முறையில் பிடிக்கப்பட்டவை என்று முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள அதிகாரி தலைமையிலான குழுவினர் குற்றஞ்சாட்டினர்.

அதனால் அந்த மீன்களை பரிசோதனைக்கு உட்படுத்தவேண்டும் என்று அதிகாரிகள் தெரிவிக்க, அதற்கு கடற்றொழிலாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். அதனால் முறுகல் ஏற்பட்டது. இதன்போது படையினர், கடற்படையினர், பொலிஸார் பிரசன்னமாகியிருந்தனர்.

இதேநேரம், கடற்றொழிலுக்கு மிகுதி 3 படகுகளில் சென்ற மீனவர்கள் கரைதிரும்பவில்லை. அதன்காரணமாகவும் கரை திரும்பிய 2 படகு மீன்களையும் மீனவர்கள் ஏற்றிச் செல்வதற்கு திணைக்களத்தினர் அனுமதி மறுத்தனர். அந்த மீன்கள் தடை செய்யப்பட்ட வலையைப் பயன்படுத்திப் பிடிக்கப்பட்டன என்று திணைக்கள அதிகாரிகளும் கடற்படையினரும் குற்றம்சாட்டினர்.

அங்கு சென்ற பொலிஸார் சம்மந்தப்பட்ட திணைக்கள அதிகாரியுடன் கலந்துரையாடினர். பின்னர் ஊரடங்கு வேளை மக்கள் கூடுவதை தவிர்க்குமாறு கூறி, மீன்களை அங்கிருந்து எடுத்துச் செல்லவும் அனுமதித்து சகலரையும் அந்த இடத்திலிருந்து கலைந்து செல்லுமாறு பணித்தனர்.

இதேவேளை, ஏனைய 3 படகுகளிலும் தொழிலுக்குச் சென்றிருந்த 9 மீனவர்கள் இரவாகியும் கரை திரும்பியிருக்கவில்லை. அவர்களைக் கடற்படையினர் கைதுசெய்து முல்லைத்தீவுப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். வெடிபொருள்களைக் பயன்படுத்தி மீன்களைப் பிடித்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும், அவர்கள் விசாரணையின் பின்னர் நீதிவானிடம் முற்படுத்தப்படுவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (கு-19)

சம்பத் வங்கி பங்குதாரர்களுக்கான அறிவித்தல்

34 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் ஒத்திவைக்கப்படுகிறது.

அன்பின் பங்குதாரர்களுக்கு,

நாட்டில் நிலவும் அசாதாரண நிலையை கருத்திற்கொண்டு, இம்மாதம் 30 ஆம் திகதி இல 48, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01 இல் அமைந்திருக்கும் கிங்ஸ்பரி ஹோட்டலில் உள்ள 'பல்மொரல்' மண்டபத்தில் நடைபெறவிருந்த 34 ஆவது வருடாந்த பொதுக்கூட்டத்தை ஒத்திவைப்பதற்கு சம்பத் வங்கியின் பணிப்பாளர்கள் சபை தீர்மானித்துள்ளது.

அசௌகரியத்திற்கு வருந்துகிறோம். நிலைமை வழமைக்கு திரும்பியதும் வருடாந்த பொதுக்கூட்டம் நடைப்பெறும் தினம் அறிவிக்கப்படும்.

பணிப்பாளர்கள் சபையின் சார்பில்

லசந்த சேனாரத்ன
நிறுவன செயலாளர்
சம்பத் வங்கி PLC
PQ144

29 மார்ச் 2020

0112 30 30 50 www.sampath.lk
சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

# இந்திய மீனவர்களுடன் தொடர்புகள் வேண்டாம்

*மன்னார் மீனவர்களுக்கு எச்சரிக்கை*



மன்னார், மார்ச் 29
இந்திய மீனவர்களுடன் தொடர்புகளைப் பேணுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மன்னார் மாவட்ட மீனவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.
மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் முப்படையினர், மன்னார் மாவட்டக் கடற்றொழில் அலுவலர், மீனவர் சங்கத் தலைவர்கள் ஆகியோருடனான விஷேட கலந்துரையாடல் மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.
இதில் மன்னார் மாவட்டச் செயலர் தெரிவித்ததாவது:
கொரோனா வைரஸ் தொடர்பாக கட்டுப்பாடுகள் விதிப்பது மக்களின் நன்மை கருதியே, அந்த அடிப்படையில் மன்னார் மாவட்ட மீனவர்களுக்கு மீன் பிடிக்கவும், பிடிக்கும் மீன்களை விற்பனை செய்யவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.
கொரோனா அவசர நிலைமை காரணமாக இந்திய மீனவர்களுடன் எந்த விதமான தொடர்புகளையும் பேணுவதை மன்னார் மீனவர்கள் முற்றாகத் தவிர்க்க வேண்டும்.
இந்தியாவில் கொரோனா தாக்கம் காரணமாக அங்கு 21 நாள்கள் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக் கப்பட்டுள்ளது. அதனால் மீன்பிடியில் ஈடுபடும் போது, மன்னார் மாவட்ட மீனவர்கள் இந்தியாவுக்குள் செல்வது, இந்திய மீனவர்கள் இலங்கைக்குள் வருவது அல்லது இரண்டு பகுதி மீனவர்களும் ஒன்றாகக் கூடிக் கலந்துரையாடுவது முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும்.
இந்தக் கட்டுப்பாடுகளை மீறுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (க-213)

# தோட்டத் தொழிலாளர்களுக்கு கடனடிப்படையில் பொருள்கள்

கண்டி, மார்ச் 29
தோட்டத் தொழிலாளர்களுக்கு கடனடிப்படையில் அத்தியாவசியப் பொருள்களை எதிர்வரும் நாட்களில் விநியோகிக்க உள்ளதாக நுவரெலியா மாவட்ட செயலர் புஷ்பகுமார தெரிவித்தார்.
இதேவேளை, ஊரடங்கு அமுலில் உள்ள நிலையில் மலையகத்தின் சில பகுதிகளில் தோட்டத் தொழிலாளர்கள் நேற்றும் தொழிலில் ஈடுபட்டிருந்தனர்.
ஊரடங்கு அமுலில் இருக்கும் நேரத்திலும் தோட்டத் தொழிலாளர்கள் பணியில் ஈடுபடமுடியும் என அரசு அறிவித்ததன் அடிப்படையில் கொழுந்து பறிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். (ந)

# கண்டியில் முதலாவது கொரோனா நோயாளி

கண்டி,மார்ச் 29

**பல்லின மக்கள் பரந்து வாழும் கண்டி மாவட்டத்தில் முதலாவது கொரோனா வைரஸ் தொற்றாளர் அக்குரணையில் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.**

அக்குரணை, தெலம்புகஹவத்த பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கே கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. அவர் கடந்த 15 ஆம் திகதி இந்தியாவில் இருந்து நாடு திரும்பியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.
கண்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இவருக்கு, கொரோனா வைரஸ் தொற்றியிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலதிக சிகிச்சைகளுக்காக அவர் கொழும்பு அங்கொடை தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இந்தியாவில் இருந்து வந்தமை தொடர்பில் சுகாதார மற்றும் பாதுகாப்புப் பிரிவுகளுக்கு அவர் அறிவிக்காததோடு, தனிமைப்படுத்தலுக்கும் உட்படுத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. இதனால் அவர் மூலம் பலருக்கு கொரோனா தொற்றியிருக்கும் அபாயநிலை தோன்றியுள்ளது. (க-22)



# அரசியல் கைதிகளை உடனே விடுவியுங்கள்

*ஜனாதிபதியிடம் மாவை கோரிக்கை*

யாழ்ப்பாணம், மார்ச் 29
சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ. சேனாதிராசா, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.
நேற்று அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.
மிருசுவில் எண்மர் கொலைக் குற்றவாளியான இராணுவச் சிப்பாய்க்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்துள்ளார். இந்தநிலையிலேயே மாவை சோ.சேனாதிராஜா மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார். (எ)

# வீட்டுக்கு வீடு பாண்

ஊரடங்குச் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால், மக்கள் வீடுகளுக்குள் முடங்கியுள்ளனர். எனவே அவர்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் நடமாடும் வியாபாரங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
குறிப்பாக பாண், பணிஸ் முதலான வெதுப்பக உற்பத்திகள் ஓட்டோக்களில் மக்களின் வீடுகளுக்கு கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.





# 100 குடும்பங்களுக்கு வவுனியாவில் உதவி

வவுனியா, மார்ச் 28
கொரோனா தொற்று காரணமாக நாடு முழுவதும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டு உள்ளமையால், நாளாந்த வருமானம் பெறும் 100 குடும்பங்களுக்கு இலண்டன் 'வீ 3' பவுண்டேசன் நிறுவனத்தினர் உலர் உணவுப்பொதிகளை வழங்கி வைத்தனர்.
லண்டனைச்சேர்ந்த சுரபாஸ்கரன், பாலா சுரேசன், லோஜினி இராமச்சந்திரன் ஆகியோரின் நிதிப்பங்களிப்பில் இந்த உதவி மேற்கொள்ளப்பட்டது. வவுனியா கற்குளம், மறவன்குளம்,பொன்னாவரசன் குளம் ஆகிய கிராமங்களில் உள்ள மக்களுக்கு கிராம அபிவிருத்திச் சங்கம், சனசமூக நிலையம் என்பன ஊடாக மாவட்ட சமூக சேவை அலுவலர் செ.ஸ்ரீநிவாசனால் இவை வழங்கி வைக்கப்பட்டன. முதியோர், மாற்றுத்திறனாளிகள், நோய்வாய்ப்பட்டோர், பெண் தலைமைத்துவம், மற்றும் அதிகபிள்ளைகளைக் கொண்ட குடும்பங்களுக்கே இந்த உதவிப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. (222)

# முகக் கவசங்களை பத்திரப்படுத்துங்கள்

*பிரதிப் பணிப்பாளர் ஆலோசனை*



**கொழும்பு, மார்ச் 29**
**முகக் கவசம் அணியும் அபாய நிலைக்கு நாம் இன்னும் தள்ளப்படவில்லை. முகக் கவசம் வைத்திருப்பவர்கள் அதைப் பத்திரப்படுத்தி வையுங்கள். இப்போதே பாவித்து முடிக்க வேண்டாம் என்று சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் பாபா பலிஹவதன தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
முகக் கவசம் அணிய வேண்டும் என்று சுகாதார அமைச்சு பரிந்துரைக்கவில்லை. அணிவதும் அணியாமல் இருப்பதும் அவரவர் விருப்பம். தினமும் நோயாளிகளின் மத்தியில் இருக்கின்ற சுகாதார ஊழியர்களும் தங்களால் மற்றவர்களுக்கு நோய்க் கிருமிகள் பரவும் என்று நினைக்கின்ற நோயாளிகளும் இதை அணிந்தால் போதும். கொரோனா வைரஸைப் பொறுத்தவரை முகக் கவசம் அணியும் நிலைக்கு நாம் இன்னும் வரவில்லை. அந்த நிலைக்கு வந்தால் அணியலாம். இப்போது முகக் கவசங்களை வாங்கி வைத்திருப்பவர்கள் இப்போதே பாவித்து முடிக்காமல் பத்திரப்படுத்தி வையுங்கள். முகக் கவசத்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள காலம் இது. இறக்குமதி செய்ய முடியாத நிலையில் உள்ளோம். இந்தச் சந்தர்ப்பத்தில் அதைப் பாவித்து முடிக்க வேண்டாம். முக்கியமாக முகக் கவசம் பாவிப்பவர்கள் பாவித்துவிட்டு அதை வீதிகளில் வீச வேண்டாம். குப்பைகளோடு குப்பைகளாக வைத்திருங்கள்- என்றார். (ஒ,5)

## சீன நாட்டவர்களும் தனிமைப்படுத்தலில்

கொழும்பு, மார்ச் 29
இலங்கையில் உள்ள சீன நாட்டவர்களும் 14 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று சுகாதாரப் பணிப்பாளர் அனில் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.
இவர்கள் இலங்கையில் உள்ள சீனத்தூதரகத்தால் தனியான ஓர் இடத்தில் தனிமைப்படுத்தப்பட்டு வருகிறார்கள் என்று அவர் மேலும் கூறினார்.
இலங்கையில் உள்ள சீன நாட்டவர்கள் ஏன் தனிமைப்படுத்தப்படவில்லை என்று எழுப்பப்பட்டு வரும் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார். அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ள இடத்தைக் குறிப்பிட்ட விரும்பாத அனில் ஜயசிங்க தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை உண்மை என்று கூறினார். (ஒ,5)

## சங்காவின் விருப்பம்



கொழும்பு,மார்ச் 29
பொலிஸாரால் ஏழை மக்களுக்கு மேற்கொள்ளப்படும் உணவு விநியோகத்துக்கு சாரதியாகக் கடமையாற்ற இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார விருப்பம் தெரிவித்துள்ளார். தலஸ்கம பொலிஸ் பொறுப்பதிகாரியின் தொலைபேசிக்கு தொடர்பை ஏற்படுத்தி, சங்கக்கார தனது விருப்பத்தைத் தெரிவித்துள்ளார்.
வெளிநாடு சென்று வந்துள்ளமையால் சுய தனிமைப்படுத்தலில் ஈடுபட்டுள்ள சங்கக்கார, இன்னும் இரண்டு மூன்று நாள்களில் சுய தனிமைப்படுத்தல் நிறைவடைந்ததும் சாரதிப் பணியில் ஈடுபட்டு மக்களுக்குச் சேவை செய்ய விருப்பம் தெரிவித்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)





## 6 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதி

யாழ்ப்பாணம்,மார்ச் 29
இளவாலை வடக்கு கிராம சேவையாளரின் தெரிவுக்கு அமைவாக, சென்.ஜேம்ஸ் பகுதியைச் சேர்ந்த 6 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டன. இதற்கான நிதியை இளவாலை ஆனைவிழுந்தான் ஆலய முதலாம் திருவிழா உபயகாரர் குமாரலிங்கம் வழங்கினார்.
ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா தற்போதைய சூழலில் நடத்தப்படாமையால், உபயகாரர்கள் திருவிழாக்களுக்கான அன்னதான நிதியை நிவாரணம் வழங்கும் செயற்றிட்டத்துக்கு வழங்கியுள்ளனர். அதற்கமைவாக முதல் நாள் செயற்றிட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது. இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்க உறுப்பினர்கள் பொதிகளை வழங்கினர். தொடர்ச்சியாக அந்தந்த நாளுக்கான ஒவ்வொரு உபயகாரர்களின் நிதியிலும் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-222)

## உலர் உணவு வழங்கிய திருமறைக் கலாமன்றம்

யாழ்ப்பாணம், மார்ச்.29
தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகளால் பாதிக்கப்பட்ட யாழ்.பிரதேச செயலகத்துக்குட்பட்ட பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த 200 குடும்பங்களுக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை புலம்பெயர் தேசத்தில் வாழ்ந்து வரும் திருமறைக் கலாமன்ற அங்கத்தவர் ஒருவரின் அனுசரணையுடன் திருமறைக் கலாமன்றத்தின் ஒழுங்குபடுத்தலில் உலர்உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. இதன்போது யாழ்.பிரதேச செயலர் எஸ்.சுதர்சனும் உடனிருந்தார். (அ)




## இராணுவத்தினர் மனிதாபிமான உதவி

அம்பாறை,மார்ச் 29
அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறைப் பிரதேசத்தில், ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த வேளை, விசேட ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் சிறுவன் ஒருவனுக்கு மனிதாபிமான உதவி வழங்கியுள்ளனர்.
வீடு ஒன்றிலிருந்து அழும் குரல் கேட்டதை அறிந்த இராணுவத்தினர் அங்கு சென்று நிலைமையை அவதானித்தனர். சிறுவன் ஒருவனுக்கு உடல்நிலை பாதிப்பு ஏற்பட்டிருப்பதை அறிந்து, அவனைப் பத்திரமாக வைத்தியசாலைக்கு அனுப்ப ஏற்பாடு செய்தனர்.
சிறுவனுக்கு வலிப்பு ஏற்பட்டதால், பெற்றோர்கள் செய்வதறியாது திகைத்து நின்றனர். இராணுவத்தினர் பெற்றோருக்கு ஒத்துழைப்பு வழங்கி, சிறுவனை வாகனத்தில் பெற்றோருடன் வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். (க)



## கிருமி நீக்கல் செயற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 29
பொதுச் சுகாதார பரிசோதகர்களின் மேற்பார்வையின் கீழ் வலிகாமம் தெற்கு பிரதேச சபையால் கிருமி நீக்கும் செயற்பாடு நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்டது. சுன்னாகம் மின்சார நிலையப் பகுதியில் இந்தப் பணி முன்னெடுக்கப்பட்டது. இதனை யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளரும் நேரில் வந்து பார்வையிட்டார். (ஒ,5)



# கொரோனாவில் இருந்து தப்பிக்க....!





ப.ஜோன் டிலக்ஷன்
(சமூகவியல் சிறப்புக்கலை
மூன்றாம் வருடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்)

கொரோனா என்பது ஒரு இலத்தீன் சொல். இதன் பொருள் கிரீடம் அல்லது ஒளிவட்டம். இவ் வைரஸ் விலங்குகள் மட்டுமன்றி மனிதர்களிலும் சுவாச நோய்த் தொற்றுக்களை ஏற்படுத்துகின்றது. கொரோனா வைரஸ் 1960களில் முதன் முதலாக கண்டுபிடிக்கப்பட்டது. கோழிகளின் மூச்சுக்குழாய், மனிதனின் நாசிக் குழிகளைப் பாதிக்கும் இரண்டு வைரஸ்களே இவ்வாறு முதன் முதலாகக் கண்டுபிடிக்கப்பட்டன. இவை 229E (Human Corona virus), OC43 எனப் பெயரிடப்பட்டன. இந்த நச்சுயிர் குடும்பத்தின் பிற வைரஸ்கள் 2003 இல் Sa+RSCoV, 2004 இல் HCoV NL63, 2005 இல் HKU1, 2012 இல் MERS CoV, 2019 இல் nCoV உள்ளிட்டவை அடையாளம் காணப்பட்டன. இவைகளில் பெரும்பாலானவை கடுமையான சுவாசக் குழாய் தொற்று நோய்களை உண்டு பண்ணக் கூடியனவாக இருந்தன.

31 டிசெம்பர் 2019 அன்று உலக சுகாதார அமைப்பால் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்ட 2019nCoV என்ற கொரோனா வைரஸ் சீனாவின் வுஹான் மாகாணத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. சீனாவின் மத்தியில் இருக்கும் ஒரு மாநிலமே வுஹான். இங்கு 1 கோடியே 10 லட்சம் மக்கள் வாழ்கின்றனர். இங்கிருந்தே COVID19 தொற்று பரவத் தொடங்கியது.

இந்த கொரோனா வைரஸ் நுரையீரலைத் தாக்கி நியூமோனியாக் காய்ச்சலை உண்டுபண்ணி, உயிரிழப்பை ஏற்படுத்தும் ஆற்றல் கொண்டது. இவை மனிதர்களிடம் இருந்து மனிதர்களுக்குப் பரவும் தன்மை கொண்டவை. இதன் விட்டம் 400-500 மைக்ரோன் ஆகும். இவ் வைரஸ் அதிக பட்சம் 21 நாட்கள் வரை எமது உடலில் அறிகுறிகளை வெளிக்காட்டாது தங்கியிருக்கக் கூடியது என சீனா தேசிய சுகாதார மையம் தெரிவிக்கின்றது.

இந் நோயின் அறிகுறிகளாக காய்ச்சல், வறட்டு இருமல், இருமலுடன் சளி வருதல், மூச்சு விடுவதில் சிரமம், தசை, மூட்டு, தொண்டை வலி, குளிர் நடுக்கம், வாந்தி மற்றும் குமட்டல், மூக்கடைப்பு, வயிற்றுப்போக்கு போன்றன காணப்படுகின்றன. இந்த தொற்று வயோதிபர்கள், சிறுவர்களுக்கே அதிகம் ஏற்படுகின்றது. அத்தோடு நீரிழிவு, சிறுநீரக நோய், நீண்ட கால சுவாச நோயினால் பாதிக்கப்பட்டோர், நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தோர், தொற்றுள்ள நபரோடு நேரடித் தொடர்பில் உள்ளவர்கள், தொற்றுள்ள நாடுகளுக்குப் பிரயாணம் செய்பவர்கள் ஆகியோரே அதிகமாக இந்த தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த வைரஸ் தொற்றில் இருந்து பாதுகாத்துக் கொள்ள ஆரோக்கியமான சுகாதாரப் பழக்கம், ஆரோக்கியமான உணவுப்பழக்கம் என்பவற்றால் மட்டுமே முடியும்.

## கொரோனா வைரஸிடம் இருந்து தப்பிக்க ஆரோக்கியமான சுகாதார பழக்கங்கள்:

- வீட்டை விட்டு வெளியில் சென்று மீண்டும் வீட்டுக்குள் வந்தால் அந்த உடையுடன் வீட்டுக்குள் நுழையக் கூடாது.
- கைகுலுக்கிப் பேசுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.
- ரயில், பஸ் போன்றவற்றில் பயணம் செய்பவர்கள் அதே உடையுடன் வந்து கதிரை, கட்டில்களில் அமர்வதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும்.
- வெளியில் இருந்து வந்தவுடன் தினமும் முழுகுதல் வேண்டும். சவர்க்காரத்தை அதிகளவு உடம்பில் உபயோகப்படுத்தி முழுகவும்.
- குளிக்கும் போதும் வெளியே இருந்து வீட்டுக்குள் வந்த பின்னரும் பல் துலக்கி நன்றாகச் சத்தமிட்டு காறித் துப்பி வாயைச் சுத்தப்படுத்தவும்.
- வெதுவெதுப்பான சுடுநீரில் உப்பு கலந்து வாயைக் கொப்பளிக்கவும்.
- குழந்தைகளை வெளியில் இருந்து வந்த உடனே தூக்கி அரவணைக்க வேண்டாம்.
- கை, வாய் துடைக்கும் ரிசு பேப்பர்களை ஒரு தடவை பயன்படுத்தியவுடன் உடனே குப்பைத்தொட்டியில் போட்டு விடவும்.
- பாதணிகளை வீட்டுக்கு வெளியே வைக்கவும்.
- மூக்கு, வாய் பகுதிகளை மறைப்பதற்கு N95 அல்லது குகுP2 அல்லது குகுP3 தரத்தில் உள்ள மாஸ்க்குகளை மட்டும் பயன்படுத்தவும். இவை மட்டுமே கிருமித் தொற்றலை தடுக்க கூடியவை. சாதாரண விலை குறைந்த 'மாஸ்க்' களைப் பயன்படுத்த வேண்டாம்.
- காய்ச்சல், தும்மல் போன்றவை ஏற்பட்டால் வீட்டில் சுயமாக மருந்துகளை எடுத்துக் கொள்ளாமல் வைத்தியரை நாட வேண்டும்.
- மற்றவருடன் உரையாடும்போது 3 அடி தூர இடைவெளிக்கு அப்பால் நின்று உரையாட வேண்டும்.





## கொரோனா வைரஸிடம் இருந்து தப்பிக்க உதவும் ஆரோக்கியமான உணவுப் பழக்கங்கள் :

- தேனீர், பால் அருந்தும் போதும், கறி சமைக்கும் போதும் இஞ்சியை சிறு துண்டுகளாக அல்லது அரைத்துச் சேர்த்துக் கொள்ளலாம்.
- சின்ன வெங்காயத்தை கறி சமைக்கும்போது வழமையைவிட அதிகமாகச் சேர்த்துக் கொள்ளலாம். அத்தோடு சின்ன வெங்காயத்தை பச்சையாகவும் உணவுடன் சேர்த்துக் கொள்ளலாம்.
- கொதித்து ஆறிய நீரில் தேசிக்காயை மெல்லிய கீற்றுக்களாக வெட்டி போட்டு சிறிது நேரம் இடைவெளி விட்டு பருகலாம். தண்ணீர் போத்தல்களிலும் தேசிக்காயை துண்டாக நறுக்கிப் போட்டு பருகலாம். கறிகள் அனைத்துக்கும் வேறு புளிக்கு பதிலாக தேசிக்காயை சேர்த்துக் கொள்ளலாம்.



- புளிப்புச் சுவை உடைய பழங்களை உட்கொள்ளலாம். இவற்றில் விற்றமின் C அதிகம் இருப்பதால் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். தோடம்பழம், தேசிக்காய், கொய்யா, நெல்லிக்காய் என்பவற்றில் விற்றமின் C அதிகம்.
- நிலவேம்பு கசாயத்தை பருகுதல் வேண்டும். காரணம் இதில் நோய் எதிர்ப்பு அதிகமாக இருப்பதால் ஆகும்.
- மாமிச உணவை நன்றாக வேக வைத்து சமைத்து உண்ண வேண்டும். அடிக்கடி மாமிச உணவு உண்பதைத் தவிர்க்க வேண்டும்.
- சலட் போன்ற பச்சையாக உண்ணக் கூடிய உணவுகளைத் தவிர்க்க வேண்டும். பச்சையாக உண்ணக் கூடிய உணவுகளில் வைரஸ் தொற்று இருந்தால் உண்பவர் உடம்பிலும் நேரடியாகப் பரவி விடும் சாத்தியம் உண்டு.
- கீரை வகைகளில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் இருப்பதால் உணவில் சேர்க்கலாம்.
- உள்ளியை (வெள்ளைப்பூண்டு) சமைக்கும் உணவுகளில் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும். அத்தோடு இவற்றை நறுக்கி கொதிநீரில் அவித்து அந்த நீரை பருகலாம்.
- ஒன்லைன் உணவு, கடைகளில் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட உணவுகள், மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள இடங்களில் விற்கப்படும் வீதியோர உணவு என்பவற்றை வாங்கி உண்பதைத் தவிர்க்க வேண்டும்.
- தினசரி ஒரு வெற்றிலை, ஒரு மிளகு , ஒரு கராம்பு வைத்து மென்று சாப்பிட்டு வந்தால் தொண்டை எப்போதும் பாதுகாப்பாக இருக்கும்.
- பாலில் மஞ்சள், மிளகு சேர்த்துக் குடித்தால் தொண்டை எப்போதும் சுத்தமாக இருக்கும்.
- குளிரான பானத்தை தவிர்த்து, சுத்தமான கொதித்தாறிய நீரைத் தினமும் பருகுதல் வேண்டும்.
- வேப்பம் பட்டைச் சாற்றில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் இருப்பதால் இதனைப் பருகி வந்தால் தொற்றில் இருந்து பாதுகாத்துக் கொள்ளலாம்.
- கிருமிகளை அழிக்கக் கூடிய. மூலிகைக் குணம் அதிகம் கொண்ட பெருங்காயத்தை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

# சர்வதேசப் பொறிமுறையே நீதிக்கான ஒரே வழி

## தமிழ் சிவில் சமூக அமையம் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,மார்ச் 29

**இதுவரை காலமும் பொறுத்திருக்குமாறும், உள்ளூர் பொறிமுறைகளில் நம்பிக்கை கொள்ள வேண்டும் என்றும், தமிழ் மக்களுக்கு ஆலோசனை கூறியோர், இனிமேலாவது அதனை நிறுத்திக் கொள்ள வேண்டும். இலங்கையில் நீதிக்கான ஒரே வழி சர்வதேச குற்றவியல் பொறிமுறைகள் மாத்திரமே இவ்வாறு தமிழ் சிவில் சமூக அமையம் வலியுறுத்தியுள்ளது.**

இராணுவ சார்ஜன்ட் சுனில் ரத்னாயக்கா பொது மன்னிப்பளிக்கப்பட்டு, விடுவிக்கப்பட்டமை தொடர்பாக அமையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சுனில் ரத்நாயக்கவுக்கு எதிராக இலங்கை நீதித்துறை வழங்கியிருந்த தீர்ப்பு விதிவிலக்கான ஒன்றாகும். கிருசாந்தி குமாரசாமி கொலை மற்றும் பாலியல் வன்கொடுமை வழக்கு தவிர்ந்து இராணுவத்தினர் ஒருவர் தமிழர்களுக்கு எதிராக இழைத்த கொடுமை தொடர்பில் குற்றவாளியாக இனங்காணப்பட்டமை இந்தவொரு சந்தர்ப்பத்தில் மாத்திரமே ஆகும்.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வேண்டுமென்றே விசாரணைகளை திசைதிருப்பல் மற்றும் அரசாங்கம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அரசியல் விருப்பின்மையால் இத்தகைய வழக்குகள் குற்றவாளிகளை அடையாளம் காணுவதோ தண்டிப்பதோ இல்லை. எனவே மிருசுவில் படுகொலைகளில் வந்த தீர்ப்பானது இலங்கை நீதி நிர்வாக முறைமை, தமிழ் மக்களுக்கு எதிராக இராணுவம் செய்த அட்டூழியங்களுக்கு நீதி வழங்காது என்ற வழமைக்கு புறம்பான ஒரு அரிய தீர்ப்பாகும்.

இதனைக் கூட ஜனாதிபதி விட்டு வைக்க விரும்பவில்லை. தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பில் இராணுவத்தினர் சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்கள் என்ற இலங்கையின் ஆளும் சிங்கள பௌத்த அரசியல் பீட சிந்தனை எவ்வளவு ஆழமானது என்பதைக் காட்டுகின்றது.

கொரோனா வைரஸ் பரவுதலுக்கான எதிரான முயற்சியில் இலங்கை அரசு இராணுவத்தினரின் பங்களிப்பை விதந்துரைத்து பிரசாரம் மேற்கொண்டு வரும் இன்றைய சூழலில், இந்த மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளமையானது தந்திரமானவோர் உபாயமாகும்.

கொரோனா வைரஸ் தொற்றுத் தொடர்பில் முழு உலகமும் கவலையும், வேதனையோடும் இருக்கும் இந்தச் சூழலில், ஜனாதிபதியின் இந்த நடவடிக்கையானது தமிழ் சமூகம் மத்தியில் எரிச்சலையும், கோபத்தையும் உண்டு பண்ணியுள்ளது. ஜனாதிபதிக்கு தமிழ் மக்களின் உணர்வுகள் தொடர்பில் கிஞ்சித்தும் அக்கறை இல்லை என்பதை இந்த நடவடிக்கை எடுத்துக் காட்டுகின்றது- என்றுள்ளது. (க)



# மருந்துகளும் இனி வீட்டுக்கே வரும்!

கொழும்பு, மார்ச் 29

தெரிவு செய்யப்பட்ட மருந்தகங்களில் இருந்து, வீடுகளுக்கு மருந்துப் பொருள்களைப் பெறும் பொறிமுறையை சுகாதார அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது என்ற சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அனில் ஜாசிங்ஹ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பொதுமக்கள் தனியார் மருந்தகங்களுக்குச் செல்வதால், கொரோனா வைரஸ் பரவும் அபாயம் உள்ளது. அதனைத் தடுக்கும் நோக்குடன், வீட்டிலிருந்தவாறே அந்தந்தப் பிரதேசத்தில் உள்ள தனியார் மருந்தகங்களில் இருந்து மருந்துகளை வீட்டுக்கு வரவழைத்துப் பெற்றுக்கொள்ளும் பொறிமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் www.health.gov.lk என்ற இணையத்தளத்தில் அல்லது http://bit.ly/sbrarma என்ற இணையத்தளத்தில், இனங்காணப்பட்ட தனியார் மருந்தகங்களது பெயர்ப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்ட தனியார் மருந்தகங்களது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் மற்றும் வட்சப், வைபர் மற்றும் இமோ ஆகியவற்றுக்கான இலக்கங்கள் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இறுதி விலைப்பட்டியலானது மருந்துகளுக்கான விலை மற்றும் வீட்டுக்கு மருந்துகளைக் கொண்டு சென்று வழங்குவதற்கான நியாயமான விநியோகக் கட்டணம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்கும்.

இதற்கான கொடுப்பனவுகள் நிகழ்நிலை (hotline) மூலமாகவோ அல்லது மருந்துகளை வீட்டில் பெற்றுக்கொள்ளும் போது பணமாகவோ செலுத்த முடியும்.நீங்கள் மருந்தைக் கொள்வனவு செய்ய விரும்பினால், ஒரு தகுதி வாய்ந்த வைத்தியரிடமிருந்து அண்மையில் பெற்றுக் கொண்ட மருந்துப் பரிந்துரைச் சிட்டைக் கொண்டிருப்பது அவசியம்.

அந்தச் சிட்டையின் நிழற்படத்தை வட்சப், வைபர் அல்லது இமோ மூலம் தெரிவு செய்யப்பட்ட மருந்தகத்துக்கு நீங்கள் அனுப்பி வைக்க வேண்டும். 24 மணிநேரத்துக்குள் நீங்கள் கொள்வனது செய்த மருந்துகள், நீங்கள் தெரிவு செய்த மருந்தகத்தின் ஊடாக உங்கள் வீட்டுக்குக் கொண்டு வந்து கையளிக்கப்படும். அவசர மருந்து வகைகளாயின் இயலுமான விரைவில் கொண்டு வந்து சேர்க்கப்படும்.

தெரிவு செய்யப்பட்ட மருந்தகத்தினால் மருந்துப் பையின் மேற்புறத்தில் அம்மருந்தை எவ்வாறு உட்கொள்வது என்பது குறித்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்கும். உங்களுக்கு அதுதொடர்பில் ஏதாவது விளக்கங்கள் தேவைப்பட்டால் தொலைபேசிமூலம் தொடர்பு கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களைப் பெற வேண்டுமாயின் அதனை நீங்கள் சிங்கள மற்றும் ஆங்கில மொழியில் பெற்றுக் கொள்வதற்கு 072 0720720 என்ற இலக்கத்தையும் தமிழ் மூலம் பெற்றுக் கொள்வதற்கு 072 060 6060 என்ற இலக்கத்தையும் அழையுங்கள்-என்றுள்ளது. (க-214)

## பட்டதாரிப் பயிலுநர்களுக்கு வேதனம்

# திறைசேரிப் பணிப்பாளருக்கு காத்திருக்கிறது கடும் சிக்கல்!

யாழ்ப்பாணம், மார்ச் 29

அரசால் நியமனம் வழங்கப்பட்ட பட்டதாரிப் பயிலுநர்களை தேர்தல் காலம் என்பதால் கடமைகளைப் பொறுப்பேற்க வேண்டாம் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருந்தது. அவர்களுக்கு சம்பளம் வழங்கினால் திறைசேரிப் பணிப்பாளர் எந்தக் காலத்திலும் பதிலளிக்க வேண்டியவராவார். இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பட்டதாரிப் பயிலுநர்கள் 45 ஆயிரம் பேருக்கு அவசர அவசரமாக அரசு நியமனக் கடிதங்களை அனுப்பியிருந்தது. அவர்களை உடனடியாக பிரதேச செயலங்களில் சென்று கடமைகளைப் பொறுப்பேற்குமாறு அறிவுறுத்தியிருந்தது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டமையால் இதனை உடனடியாக இடைநிறுத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழு பணித்திருந்தது.

இந்த நிலையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ சில தினங்களுக்கு முன்னர் கொரோனா வைரஸ் தொடர்பான நிவாரண நடவடிக்கையில், பட்டதாரிப் பயிலுநர்களுக்கு சம்பளம் வழங்கப்படும் என்று கூறியிருந்தார்.

பட்டதாரிப் பயிலுநர்களுக்கு மார்ச் மாதச் சம்பளத்தை வழங்குமாறு ஜனாதிபதி செயலகம் கடிதம் அனுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும், அதனை வழங்குவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு நியமனத்தை இடைநிறுத்தியமை தொடர்பில் வெளியிட்ட கடிதம் தடையாக இருக்கும் என்று கூறப்படுகின்றது. (ஓ,5,105)

# எஸ்.எம்.எஸ் ஆபத்து!

கொழும்பு,மார்ச்.29

கொரோனா வைரஸில் இருந்து உங்களைப் பாதுகாப்பதற்கு, இலவச முகக்கவசங்கள் வழங்கப்படுவதாக, குறுஞ்செய்திகள் ஏதும் வந்தால், அந்தக் குறுஞ்செய்தியில் குறிப்பிடப்படும் 'லிங்கை கிளிக்' செய்ய வேண்டாம் என, இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அவ்வாறு அந்த லிங்கை கிளிக் செய்யும்போது, உங்களது அலைபேசி முற்று முழுதாக 'ஹக்' செய்யப்படும் என்றும் எனவே, இது குறித்து அலைபேசிப் பாவனையாளர்கள் அனைவரும் அவதானமாக இருக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# நிவாரணம் வழங்குக!

## சஜித் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 29

தோட்ட, விவசாய செய்கையாளர் மற்றும் மீன்பிடித் தொழிலாளர்களுக்கான நிவாரணங்களை உடனடியாக பெற்றுக் கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ விடுத்துள்ள விசேட அறிவிப்பொன்றிலேயே, இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் அரசாங்கம் உடனடியாக கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார். (அ)



# வேலணையில் கொரோனா எதிர்ப்பு!

வேலணை, மார்ச் 29
கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பொதுமக்கள் கூடும் இடங்களில் கிருமி தொற்று நீக்கி விசிறல், ஒலி பெருக்கி மூலம் மக்களுக்கான விழிப்புணர்வு மற்றும் விழிப்புணர்வு சுவரொட்டிகளை ஒட்டுதல் போன்ற பணிகளை வேலணை பிரதேச சபையினர் தற்போது முன்னெடுத்து வருகின்றனர். பிரதேச சபைஅலுவலர்கள், ஊழியர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோர் இணைந்து இந்தப் பணியை முன்னெடுத்தனர். (ந-7)

# தனிமைப்படுத்தப்பட்ட 300 பேர் நேற்று விடுவிப்பு

கொழும்பு,மார்ச் 29
**கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக, 4 தனிமைப்படுத்தல் நிலையங்களிலிருந்து 300 பேர் தமது இருப்பிடங்களுக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.**

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வருகைதருபவர்கள் 14 நாள்கள் தனிமைப்படுத்தல் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுவர். இவ்வாறு, தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த சுமார் 300 பேர் கொண்ட ஐந்தாவது குழு நேற்றுச் சனிக்கிழமை வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சந்தன விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
புனாணை, கல்கந்த, வவுனியா பம்பைமடு மற்றும் தியத்தலாவை ஆகிய நான்கு தனிமைப்படுத்தல் நிலையங்களிலிருந்து 300 பேர் தமது இருப்பிடங்களுக்குச் சென்றுள்ளனர். இத்தாலி மற்றும் தென்கொரியா உள்ளிட்ட நாடுகளிலிருந்து இலங்கைக்கு திரும்பிய இவர்கள், கொழும்பு ,நீர்கொழும்பு, சிலாபம் மற்றும் மாத்தளை உள்ளிட்ட பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த செவ்வாய்கிழமை முதல் நேற்று வரையான காலப்பகுதியில் சுமார் ஆயிரத்து 287 பேர் தனிமைப்படுத்தல் மருத்துவக் கண்காணிப்பை நிறைவு செய்து வீடுகளுக்குச் சென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (சு-114)

# மக்களுக்கான உதவிகளை எங்களூடாக வழங்குங்கள்!

## மட்டு.மாவட்ட செயலர் கோரிக்கை

மட்டக்களப்பு, மார்ச் 29
அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனியார் மேற்கொள்ளும் உதவிகளை, மாவட்ட செயலகத்தினூடாக வழங்க வேண்டும், என மட்டக்களப்பு மாவட்டச் செயலர் கோரியுள்ளார்.
மட்டக்களப்பு கொரோனா தடுப்பு செயலணியின் விசேட கலந்துரையாடல், மட்டக்களப்பு மாவட்டச் செயலர் கலாமதி பத்மராஜா தலைமையில் இடம்பெற்ற போது, மக்களுக்கான உதவிகள் வழங்குவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.
அதன்படி நாளாந்தம் வருமானம் பெறும் குடும்ப அங்கத்தவர்களின் வாழ்வாதார உதவிகளை நிவர்த்தி செய்யும் முகமாக அரசாங்கமும், அரசசார்பற்ற நிறுவனங்களும், தனியாரும் மேற்கொள்ளும் உதவிகளை ஒரே கூரையின் கீழ் வழங்குவதன் மூலம் சரியான நபர்களுக்கு இந்த உதவிகள் சென்றடைவதை உறுதிப்படுத்த முடியும் என எடுத்துக் காட்டப்பட்டது.
எனவே உதவி வழங்கும் தொண்டு நிறுவனங்களும் தனிநபர்களும் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தை தொடர்பு கொண்டு தங்களது உதவிகளை வழங்கி வைக்குமாறு கேட்டுக் கொள்ளவதாக மாவட்டச் செயலர் இதன் போது குறிப்பிட்டார்.
அதேபோல் ஊரடங்கு நாட்கள் மேலும் அதிகரிக்கப்படும் பொழுது மக்களின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்யும் முகமாக அத்தியாவசிய பொருட்களை வீட்டுக்கு கொண்டு சென்று வழங்கும் ஒரு பொறிமுறையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டது. (ந)




# ஊரடங்கை மீறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

மட்டக்களப்பு, மார்ச் 29
ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள காலப்பகுதியில் அத்தியாவசியத் தேவைகள் இல்லாமல், எவரும் வீதிகளில் நடமாடக் கூடாது எனவும்,நடமாடுபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் வாழைச்சேனை பொலிஸார் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தல் வழங்கி வருகின்றனர்.
வாழைச்சேனை பொலிஸ் பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களிடம் கொரோனா வைரஸை கட்டுப்படுத்த அரசு முன்னெடுத்துள்ள அனைத்துச் செயற்பாடுகளுக்கும் பூரண ஒத்துழைப்புக்களை வழங்குமாறும் ஒலிபெருக்கி மூலம் பொலிஸார் கோரியுள்ளனர்.
இதேவேளை, பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தை மீறும் நபர்களுக்கு பொலிஸ் பிணை வழங்கப்படாது என பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-150)

# ஊரடங்கு நேரத்தில் நடமாடுவதற்கு பாஸ்

மன்னார் மாவட்டத்தில் ஊரடங்குக் காலத்தில் நடமாடுவதற்காக அனைவருக்கும் பாஸ் வழங்குவதற்கு மாவட்டச் செயலகத்தின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
மன்னார் மாவட்டச் செயலர் தலைமையில் மாவட்டச்செயலகத்தில், முப்படையினருடன் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.
எதிர்வரும் 30 ஆம் திகதிக்குப் பின்னரும் ஊரடங்கு அமுலில் உள்ள நேரத்தில், அவசரத் தேவைக்காக நடமாடுவதற்காக ஒவ்வொரு பொலிஸ் பிரிவிலும் பாஸ் வழங்கப்படவுள்ளது.
அரச உத்தியோகத்தர்கள், பொதுமக்கள், வியாபாரிகள் ஊரடங்கு அமுலில் உள்ள நேரத்திலும் நடமாடுவதற்காக பாஸ் அனுமதியைப் பயன்படுத்த முடியும்.
மீனவர்களுக்கு மீன்பிடித் திணைக்களத்தின் உதவி பணிப்பாளரின் சிபாரிசிலும், விவசாயிகளுக்கு விவசாயத் திணைக்களத்தின் பிரதி பணிப்பாளரின் சிபாரிசிலும் இந்தப் பாஸ் வழங்கப்படும்.
இந்தப் பாஸ் அனுமதிகள் அனைத்தும் பிரதேச செயலாளர்களின் சிபாரிசுகளுடன், அந்தந்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளால் வழங்கப்படும் என்று மாவட்டச் செயலர் தெரிவித்துள்ளார். (சு-213)

# பருப்புக்கு தட்டுப்பாடில்லை

கொழும்பு, மார்ச் 29
இலங்கையில் எந்தச் சந்தர்ப்பத்திலும் பருப்புக்கு தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பில்லை என்று நுகர்வோர் விவகார ஆணையத்தின் தலைவர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் சாந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.
உலகின் ஏனைய நாடுகளிலும் பருப்புக்கு தட்டுப்பாடு ஏற்படாது என்றும் தெரிவித்தார். தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கலந்து கொண்டபோது இதனைத் தெரிவித்தார்.
அரசு நிர்ணயித்த விலை நிர்ணயம் சில நாள்களில் இல்லாமல் போய்விடும், விலை மீண்டும் உயருமென நினைக்கும் சில வர்த்தகர்கள், விலை உயரும் வரை பொருள்களை பதுக்க முயற்சிக்கிறார்கள். இது ஒருபோதும் நடக்காது. பொதுமக்களுக்கு வழங்காமல் பருப்பை பதுக்கி வைத்தால் அவரை 6 மாதங்கள் சிறைக்கு அனுப்ப அதிகாரம் உள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ஒ,5)

# தேர்தல் எப்போது? இன்னும் முடிவில்லை!

## ஆணைக்குழு உறுப்பினர் ரட்ணஜீவன் ஹூல் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 29
ஒத்திவைக்கப்பட்ட நாடாளுமன்றத் தேர்தல் எப்போது நடத்துவது என்பது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு எந்தத் தீர்மானமும் எடுக்கவில்லை என்று, தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜுவன் ஹூல் உதயனுக்குத் தெரிவித்தார்.
இலங்கையின் 9 ஆவது நாடாளுமன்றத்துக்கான தேர்தல் ஏப்ரல் 25 ஆம் திகதி நடத்தப்பட்டு, கன்னி அமர்வு மே மாதம் 14 ஆம் திகதி நடைபெறும் என்று ஜனாதிபதியால் வர்த்தமானி அறிவித்தல் ஊடாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக வேட்புமனுத் தாக்கல் முடிவடைந்த கையோடு பொதுத்தேர்தலை தேர்தல் ஆணைக்குழு ஒத்திவைத்தது.
தேர்தல் ஒத்திவைக்கப்பட்டமையால் தேர்தல் சட்டத்துக்கு அமைவாக, ஏப்ரல் 25ஆம் திகதியிலிருந்து 14 நாள்களின் பின்னரே தேர்தலை நடத்த முடியும். அதேவேளை 19ஆவது திருத்தச் சட்டத்துக்கு அமைவாக, நாடாளுமன்றத்தை கலைத்து மூன்று மாதங்களுக்குள் நாடாளுமன்றம் மீண்டும் கூடுவதற்கான திகதி அறிவிக்கப்பட வேண்டும்.
இந்த நிலையில் நவம்பர் மாதமே நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறவுள்ளதாக பரவலாக பேசப்பட்டிருந்தது. இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜுவன் ஹூலிடம் உதயன் வினவியது.
ஒத்திவைக்கப்பட்ட நாடாளுமன்றத் தேர்தலை எப்போது நடத்துவது என்பதை தேர்தல்கள் ஆணைக்குழுவே தீர்மானிக்கும். இப்போது வரையில் தேர்தலை எப்போது நடத்துவது என்று தீர்மானிக்க வில்லை, என்றார். (ஒ,5)

# ஊரடங்கை மீறிய 47 பேர் மன்னாரில் கைது

மன்னார் ,மார்ச் 29
மன்னார் மாவட்டத்தில் பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தை மீறிய 47 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
மன்னார் மாவட்டத்தில் பொலிஸ் ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தப்பட்ட காலத்தில் இருந்து நேற்று வரையான காலப்பகுதியிலேயே குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
குறிப்பாக அநாவசியமான முறையில் வீதிகளில் நடமாடியவர்கள், வீதிகளில் கூடி நின்று கதைத்தவர்கள் என 47 பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-56)

# உணவு விநியோகத்துக்கு இடையூறு விளைவிக்கவேண்டாம்

## பொலிஸ்மா அதிபருக்கு மஹிந்த அறிவுறுத்தல்

கொழும்பு, மார்ச் 29
நாட்டில் ஊரடங்கு நடைமுறையிலிருக்கும் காலப்பகுதியில் அது முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற அதேவேளையில், மனிங் சந்தை உள்ளிட்ட அனைத்துப் பொருளாதார நிலையங்களுக்கும் மரக்கறிகள், பழங்கள், தேங்காய்கள் உள்ளிட்ட உணவுப்பொருள்களை எடுத்துச்செல்லும் வாகனங்களுக்குத் தேவையான அனுமதி வழங்கப்படவேண்டுமென, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதில் பொலிஸ்மா அதிபர் சந்தன விக்கிரமரத்னவுக்கு நேற்றுப் பணிப்புரை விடுத்தார்.



விவசாயிகளிடமிருந்து உணவுப் பொருள்கள் சிரமங்களின்றிச் சந்தையைச் சென்றடைவதன் மூலமாக, பாவனையாளர்களுக்கு உணவுப்பொருள்கள் ஒழுங்காகவும் தடைகளின்றியும் அடைய வேண்டுமென்பதை உறுதிப்படுத்துவதற்காகவே, பொலிஸ்மா அதிபருக்கு இந்தப் பணிப்புரைகளைப் பிரதமர் வழங்கியுள்ளார்.
பிரதமர் தற்போது உணவுப்பொருள்களைக் கொண்டு செல்லும் பொறிமுறையில் உள்ள சிரமங்கள், இடையூறுகள் தொடர்பாக கிடைக்கப்பட்ட தகவல்களைக் கருத்திற்கொண்டிருந்தார்.
அதேபோல், கொரோனா வைரஸ் தொற்றுப்பரவலை கவனக்குறைவாக எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்த பிரதமர், இத்தொற்றானது உலகம் முழுவதும் பேரழிவு மிகுந்த தொற்றாக வேகமாகப் பரவிவரும் நிலையில், மருத்துவ அறிவுரைகளைப் பின்பற்றுவதன் மூலமாக, இத்தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் நிகழ்ச்சித்திட்டத்துக்கு உதவி வழங்குமாறும் பொதுமக்களிடம் கோரினார். (ஓ,5)



# உலர்உணவு உதவி

சாவகச்சேரி, மார்ச் 29
நாட்டில் கொரோனா தொற்று காரணமாக ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையினையடுத்து, அன்றாடம் வருமானம் பெறும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு, உலர்உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன. சாவகச்சேரி, மண்டூர் பகுதியில் ஜீவ ஊற்று நிறுவனப் பணியாளர்கள் வீடு வீடாக சென்று, இந்த உதவி வழங்கப்பட்டது. இதற்கான நிதி உதவியை அவுஸ்ரேலியா இம்மேஜின் கெம்பசிசன் இன்டர்நேஷனல் லிமிடெட் நிறுவனத்தினர் செய்திருந்தனர். (ந-222)

# இலங்கையின் அங்கத்துவத்தை ஐ.நா சபை மீள்பரிசீலிக்குக!

## விக்னேஸ்வரன் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச் 29
குற்றவாளிக்கு அரசு வழங்கிய பொது மன்னிப்பு, இலங்கையில் சட்டத்தின் ஆட்சி செத்துவிட்டதென்பதை எடுத்துக் காட்டுகின்றது. எனவே இலங்கையின் ஐ.நா சபை அங்கத்துவம் மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டிய தருணம் உதயமாகியுள்ளதுஇவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.
ஊடகங்களுக்கும், சர்வதேச தூதுவர் அலுவலகங்களுக்கும் அவரால் அனுப்பப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
தண்டனைக் குற்றவாளி சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்கவுக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவால் அளிக்கப்பட்டுள்ள மன்னிப்பும், விடுவிப்பும் கொவிட் 19 எனப்படும் கொரோனா வைரஸுடன் எவ்விதத்திலும் தொடர்புடையதன்று. அது ஒரு அரசியல் சார்ந்த நடவடிக்கை.
இந்த நடவடிக்கையானது நீதித்துறை உள்ளடங்கிய சகல சமூகம் சார் அமைப்புக்களையும், அரசியல் ரீதியாக்கும் அதன் மனோநிலையையும் எடுத்துக் காட்டுகின்றது.
இல்லாத பொல்லாத காரணங்களைக் காட்டி தம் மக்களைப் பாதுகாத்து, அதே நேரத்தில் பெரும்பான்மை சமூகத்தினரின் பெரும்பான்மை வாக்குகளை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பெற்றுக் கொள்ளவும் வழியமைத்து வருகின்றது இன்றைய அரசாங்கம்.
ரத்நாயக்கவின் விடுவிப்பானது மனித



நேயத்துக்கு முரணானது மட்டுமல்ல, மனித குலத்தை வெறுப்பேற்றும் செயலுமாகும்.
இதுவரையில் தனது சர்வதேச கடப்பாடுகளையும், ஐக்கிய நாடுகளின் பரிந்துரைகளையும்உதாசீனப்படுத்தியே இலங்கை அரசாங்கம் வந்துள்ளது.
வேண்டுமென்றே எடுக்கப்பட்ட ஜனாதிபதியின் இந்த நடவடிக்கை காலம் காலமாகத் தமிழர்களுக்கு எதிராக, இந்த நாட்டில் எடுக்கப்பட்டு வந்த நடவடிக்கைகளை ஒட்டியே எடுக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.
தமிழ் மக்களின் சகிப்புத் தன்மை எல்லை கடந்துவிட்டது. எனவே போர்க்குற்றவாளிகள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்களைப் புரிந்தவர்கள், தமிழர்க்கு எதிராக இனப்படுகொலை செய்தவர்கள் அனைவரும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் முன் அல்லது ஐக்கிய நாடுகளால் இலங்கைக்கு எதிராக வகுக்கப்படும் விசேட நீதிமன்றமொன்றின் முன்னிலையில் உடனே கொண்டு வரப்பட வேண்டிய காலம் இன்று கனிந்துள்ளது. என்றுள்ளது. (க)

# துறைமுகம் தூய்மை

மட்டக்களப்பு, மார்ச் 29
மட்டக்களப்பு வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து ஆழ்கடலுக்கு மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்வதால் மீன்பிடித் துறைமுகத்தினை துப்பரவு செய்யும் பணிகள் நேற்றுச் சனிக்கிழமை நடைபெற்றன.
இதில் வாழைச்சேனை விசேட அதிரடிப் படையின் பொறுப்பதிகாரி ஏ.எஸ்.பிரேமரத்ன, வாழைச்சேனை பிரதேச சபைத் தவிசாளர் திருமதி.சோபா ஜெயரஞ்சித், ஓட்டமாவடி பிரதேச சபைத் தவிசாளர் ஐ.ரி.அஸ்மி, செயலாளர் எஸ்.சிஹாப்தீன், வாழைச்சேனை மீன்பிடி துறைமுக முகாமையாளர், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், விசேட அதிரடிப் படையினர், பிரதேச சபைகளின் அலுவலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.
இதன்போது தொற்று நீக்கி விசிறும் நடவடிக்கை இடம்பெற்றதுடன், துறைமுகத்தின் வளாகம் துப்பரவு செய்யப்பட்டு மீன்கள் சேகரிக்கும் இடத்தை நீர் மூலம் துப்பரவு செய்யப்பட்டது. (ந-150)

# கொரோனாவை விரட்ட புனித நீர் தெளிப்பாம்!

கொழும்பு,மார்ச் 28
கொரோனா வைரஸ் தொற்றை நாட்டிலிருந்து விரட்ட உலங்கு வானூர்தி மூலம் புனித நீர் நேற்றுத் தெளிக்கப்பட்டது.
தலதா மாளிகையில் இடம்பெற்ற பூசைகளை அடுத்து, அங்கிருந்து 'பிரித்' ஓதப்பட்ட புனித நீர் உலங்கு வானூர்தி மூலம் நாட்டின் பல பகுதிகளிலும் தெளிக்கப்பட்டது.
தலதா மாளிகையின் பவதன நிலமே பிரதிப் திலங்கதவின் தலைமைத்துவத்தின் கீழ் இந்தப் புனித நீர் தெளிக்கும் சடங்கு நேற்றிரவு நடைபெற்றது.
நாட்டின் கொரோனா விலகி, மீண்டும் சுபீட்சம் கிடைக்கபுத்த பெருமானை வேண்டிபூசையும், புனித நீர் தெளிப்பும் மேற்கொள்ளப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (அ)




### இந்தியாவில்

# சேரிப்புறப் பகுதிகளில் கொரோனாத் தொற்று!

புதுடெல்லி, மார்ச் 29

இந்தியாவின் சேரிப்புறப் பகுதிகளில் கொரோனாத் தொற்று உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. அதிலும் சமூக இடைவெளியே சாத்தியமில்லாத மும்பை சேரிப்புறப் பகுதிகளில் பத்துப் பேருக்குக் கொரோனா தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளதால் அங்கு பேரச்சம் குடிகொண்டுள்ளது.



சீனாவைப் போன்று மிகப்பெரும் சனத்தொகை கொண்டது இந்தியா. ஆனால் சீன அளவுக்குத் தொழில்நுட்பம் அங்கு இல்லை. இதனால் கொரோனா தொற்று பரவினால் இந்தியா பெரும் அழிவைச் சந்திக்கும் என்று எதிர்வு கூறப்பட்டது. குறிப்பாக சன நெரிசல் மிக்க பகுதிகளில் கொரோனா வந்துவிடாமல் இருக்கவேண்டும் என்பதில் இந்திய அரசு அவதானமாக இருந்தது. ஆனால் எதற்காக இந்திய அரசு அஞ்சியதோ அது நடந்துவிட்டது.

மேற்குறிப்பிட்ட பத்துப் பேருக்கும் எங்கிருந்து நோய் தொற்றியிருக்கும் என்ற வேரைக் கண்டுபிடிப்பது மிகக் கடினமானது என்ற இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனால் குறைந்தபட்சம் ஊரடங்கு உத்தரவைக் கடுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம)



# நடிகர் கமலுக்கு கொரோனாவா?

புதுடெல்லி, மார்ச் 29

மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல் ஹாசனின் வீட்டில் கொரோனா நோட்டீஸ் ஒட்டப்பட்டதால் பெரும் சர்ச்சை ஏற்பட்டது.

தமிழகத்தில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்படுகின்றன. கொரோனா தொற்று அறிகுறி உள்ளவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். வெளிநாடுகளுக்கு சென்று வந்தவர்களுக்கு கொரோனா தொற்றியிருக்கலாம் என்ற அச்சம் எழுந்துள்ளதால் அவர்களும் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்படுகின்றனர். இவ்வாறு சந்தேகிக்கப்படும் நபர்களின் வீடுகளில் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகள் சார்பில் நோட்டீஸ் ஒட்டப்படுகிறது.

இந்த நிலையில் மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவரும் நடிகருமான கமல் ஹாசனின் வீட்டில் நேற்றுமுன்தினம் இரவு கொரோனா நோட்டீஸ் ஒட்டப்பட்டது. சென்னை ஆழ்வார் பேட்டையில் உள்ள வீட்டில் மாநகராட்சி ஊழியர்கள் இந்த நோட்டீசை ஒட்டியுள்ளனர். அதில், கொரோனாவில் இருந்து எங்களைக் காக்க, சென்னையைக் காக்க, எங்களை தனிமைப்படுத்திக் கொண்டுள்ளோம் என குறிப்பிடப்பட்டுள்ளது. கமலின் வீட்டில் வேலை செய்தவர்களில் யாரோ ஒருவர் வெளிநாடு சென்று வந்ததால், அவரது கடவுச்சீட்டு முகவரியின் அடிப்படையில் அந்த வீட்டில் நோட்டீஸ் ஒட்டப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



# மரண அறிவித்தல்

## திருமதி செல்வரட்ணம் வள்ளியம்மை

பிறப்பு 15.05.1935 — இறப்பு 28.03.2020



காரைநகர் நீலிபந்தனையைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வரட்ணம் வள்ளியம்மை 28.03.2020 சனிக்கிழமை பிரான்ஸில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா செல்வரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சீனி வாசகம் பாக்கியம் தம்பதியரின் ஏக புதல்வியும், காலஞ்சென்ற பொன்னையா செல்லமுத்து அவர்களின் அன்பு மருமகளும், அமரர் திருச்செல்வம், திருச்செல்வி, திருவள்ளுவர் (பிரான்ஸ்), திருப்பதி (PST & Sons Pvt (Ltd)), தவமணி (பிரான்ஸ்), திருச்சிற்றம்பலம் (பிரான்ஸ்), திருவருட்செல்வி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், தர்மாவதி பாஸ்கரன், தமயந்தி (பிரான்ஸ்), லோகேஸ்வரி, லோகேஸ்வரன் (பிரான்ஸ்), கோமளதேவி (பிரான்ஸ்), ரூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:


திருப்பதி (மகன்)
0773923036
P.S.T. Stores
P.S.T. & Sons (Pvt) Ltd.

திருச்சிற்றம்பலம் (மகன்)
பிரான்ஸ்
0033767679967

தவமணி (மகள்)
பிரான்ஸ்
0033699182704


# தடுப்பு மருத்தை கண்டுபிடிக்க இந்திய வல்லுநர்கள் முழுவீச்சு

புதுடெல்லி, மார்ச் 29



கொரோனாவுக்கான தடுப்பு மருந்தைக் கண்டுபிடிப்பதற்காக முழு வீச்சில் தயாராகிக் கொண்டுள்ளனர் இந்திய வல்லுநர்கள்.

கொரோனா உலகெங்கும் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு மருந்தைக் கண்டுபிடிப்பதற்கு சீனா, அமெரிக்கா, இஸ்ரேல், இத்தாலி, பிரான்ஸ், ஜேர்மன், கனடா, பிரிட்டன் ஆகிய நாடுகளின் வல்லுநர்கள் பல்வேறுபட்ட முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் இந்திய வல்லுநர்களும் கொரோனாவுக்கான தடுப்பு மருந்தைக் கண்டுபிடிப்பதற்கு முழுவீச்சில் களமிறங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

### கொரோனா நிதி ஒதுக்கீடு

# தமிழகத்துக்கு ரூ.9,000 கோடி

### முதல்வர் எடப்பாடி கோரிக்கை

சென்னை, மார்ச் 29

கொரோனா பரவல் தடுப்பு நடவடிக்கைகளுக்காக தமிழகத்துக்கு 9 ஆயிரம் கோடி ரூபா (இந்திய மதிப்பில்) வழங்க வேண்டும் என்று தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி கோரிக்கை விடுத்துள்ளார்.

கொரோனா பரவல் தடுப்பு நடவடிக்கையின் முக்கிய பகுதியாக இந்தியாவில் 21 நாள்கள் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து தனது மாநிலங்களுக்கு உதவித் தொகைகளை வழங்கத் தயாராகி வருகின்றது இந்திய மத்திய அரசு. அந்த வகையில் தமிழகத்துக்கு 9



ஆயிரம் கோடி ரூபாவை இதற்காக ஒதுக்கித் தர வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார். (ம)

## கொரோனா உயிர்கொல்லி

# பேராபத்து நீங்க வேண்டுமென பாப்பரசர் சிறப்பு வழிபாடுகள்!

உரோம், மார்ச் 29

கொரோனா வைரஸால் நாள்தோறும் பல்லாயிரம் மக்கள் உயிரிழந்து வரும் நிலையில், இந்தப் பேராபத்து நிலை நீங்க வேண்டும் என்று சிறப்பு வழிபாடு நிகழ்த்தியுள்ளார் பாப்பரசர் பிரான்சிஸ். இந்த வழிபாட்டின் முக்கிய பகுதியான ஊருக்கும் உலகுக்குமான (உர்பி எர்த் ஓர்பி) உரையையும் அவர் வழங்கினார்.





சீனாவின் வுகான் மாகாணத்தில் டிசெம்பர்மாதம் அவதானிக்கப்பட்ட கொரோனா வைரஸ் நாள்தோறும் பல்லாயிரம் மக்களை தன் பிடிக்கு உட்படுத்தி வருகின்றது. சமீப நாள்களாக நாள் ஒன்றுக்கு சுமார் 2 ஆயிரத்து 500 பேர் என்ற அடிப்படையில் மக்கள் உயிரிழந்து வருகின்றனர்.

குறிப்பாக இத்தாலியில் மிகப்பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இன்று அதிகாலை நிலவரத்தின்படி சுமார் 10 ஆயிரம் பேர் இத்தாலியில் உயிரிழந்துள்ளனர். சுமார் 90 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான பாப்பரசர் பிரான்சிஸ் ஊருக்கும் உலகுக்குமான வாழ்த்துச் செய்தியை நேற்றுமுன்தினம் வழங்கினார்.

உலகெங்கும் வாழும் பல கோடி கத்தோலிக்கர்கள் இந்த வழிபாட்டை தொலைக்காட்சியில் நேரலையாகக் கண்டனர். வழிபாட்டின் இறுதியில் நற்கருணை ஆசீர்வாதத்தையும் திருத்தந்தை வழங்கினார். (ம)

## 10 நாள்களில் மருத்துவமனை

### இந்தியாவில் கட்டுவதற்கு தயார் என சீனா அறிவிப்பு

பீஜிங், மார்ச் 29

கொரோனா சிகிச்சை க்காக இந்தியாவில் 10 நாள்களில் மருத்துவமனையொன்றை அமைத்துக் கொடுப்பதற்குத் தயார் என்று அறிவித்துள்ளது சீனா.

சீனாவில் கொரோனா பரவியபோது சீன அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. குறிப்பாக ஆயிரத்து 600 படுக்கை அறைகளுடன் மிகப்பெரும் மருந்துவமனையொன்றை வுகான் நகரில் கட்டியது. இந்த மருத்துவமனையே சீனாவில் கொரோனா வைக் கட்டுப்படுத்த பெரும் பங்காற்றியது. இத்தகைய மருத்துவமனையொன்றை இந்தியாவுக்குக் கட்டிக்கொடுக்க முன்வந்துள்ளது சீனா. (ம)

## இந்தோனேசியாவில் நேற்று நிலநடுக்கம்!

இந்தோனேசியா, மார்ச் 29

இந்தோனேசியாவின் பப்புவா மாகாணத்தில் உள்ள ஜெயப்புரா மாவட்டத்தில் நேற்று சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 5.9 புள்ளிகளாகப் பதிவானது.

இந்த நிலநடுக்கம் பூமிக்கு அடியில் 11 கி.மீ ஆழத்தில் மையம் கொண்டிருந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சில வினாடிகள் நீடித்த இந்த நிலநடுக்கத்தால் வீடுகள் உள்ளிட்ட கட்டிடங்கள் பயங்கரமாக குலுங்கின. எனினும் நிலநடுக்கம் காரணமாக சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம)




## 64 நாடுகளுக்கு அமெ. உதவி!

வொஷிங்டன், மார்ச் 29

கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளுக்காக அமெரிக்கா 64 நாடுகளுக்கு நிதியுதவி வழங்கியுள்ளது. 174 மில்லியன் டொலர்களை அமெரிக்கா அவ்வாறு கொடுத்துள்ளது.

அமெரிக்காவின் சர்வதேச வளர்ச்சித் துறை உதவி நிர்வாகி போனி கிளிக் என்பவர் இந்த உதவித் தொகை தொடர்பில் தெரிவித்ததாவது: 'பொதுச்சுகாதாரத்தில் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக உதவிகளை வழங்குவதில் அமெரிக்கா முன்னிலை வகிக்கிறது. நோய் பாதிப்பில் அதிகம் பாதிக்கப்படுவோர் மீதான அக்கறையில் அமெரிக்கா பல உயிர்களை காப்பாற்றியுள்ளது. சுகாதார நிறுவனங்களை கட்டமைத்து சமுதாயங்கள் மற்றும் நாடுகளிடையே நிலைத்தன்மையை அமெரிக்கா ஏற்படுத்தியுள்ளது. தெற்காசியாவில் 1 மில்லியன் டாலர்கள் சுகாதார நிதியுதவியை அமெரிக்கா அளித்துள்ளது. எதிர்கால கொள்ளை நோய்த் தொற்று மற்றும் பரவலைத் தடுக்கவும், தயாரிப்புகளில் ஈடுபடவும் இந்த நிதியுதவியை அமெரிக்கா வழங்கி வருகிறது - என்றார். (ம)



# விரைந்து குணமாகவேண்டும் பிரிட்டனின் பிரதமர் போரிஸ்!

### ட்ரம்ப் வாழ்த்து

வொஷிங்டன், மார்ச் 29

கொரோனாவால் பாதிக்கப்பட்ட பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சனுக்கு, விரைந்து குணமாகுங்கள் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

சீனாவைப் பிறப்பிடமாகக் கொண்ட கொரோனா வைரஸ், ஆசிய, ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் பாரபட்சம் இல்லாமல் தனது கோர முகத்தைக் காட்டிவருகிறது. உலகம் முழுவதும் இந்த வைரஸால் 5.5 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சனுக்கு கொரோனா தொற்று இருப்பது நேற்றுமுன்தினம் உறுதி செய்யப்பட்டது. இந்த நிலையில் விரைந்து குணமாக போரிஸ் ஜோன்சனுக்கு, ட்ரம்ப் வாழ்த்து தெரிவித்துள்ளார். முன்னதாக மோடியும் வாழ்த்துத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# உலகக்கிண்ணம் வெல்லவில்லை!

*வாழ்வின் பெரும்குறை இது என்கின்றார் ரோகித் சர்மா*

புதுடெல்லி, மார்ச் 29
2011ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடருக்கான அணியில் இல்லாதமை என் வாழ்வின் கவலை யான தருணம் என்று தெரிவித்துள் ளார் இந்திய அணியின் ஆரம்ப வீர ரான ரோகித் சர்மா.
இது தொடர்பில் ரோகித் மேலும் தெரி வித்ததாவது:
2011ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடருக்கான இந்திய அணியில் நான் இடம்பெறவில்லை. எங்களுடைய சொந்த நாட்டில் நடைபெற்ற தொடரில் இடம்பிடிக்காதமை எனது கிரிக்கெட் வாழ்க்கையில் மிகவும் சோகமான தரு ணம். மேலும், என்னுடைய சொந்த மைதானமான வான்கடேயில் இறுதி போட்டி நடைபெற்றது. உலகக்கிண் ணத் தொடருக்குமுன் நான் சிறப்பாக விளையாடவில்லை. அதனால்தால் அணியில் எனக்கு இடம் கிடைக்க வில்லை" என்றார். (ம)




*கொரோனாவுக்கு எதிரான போர்*

# ரொனால்டோ 25கோடி உதவி




லிஸ்பன், மார்ச் 29
போர்த்துக்கல் கால்பந்தாட்ட அணியின் தலைவர் ரொனால்டோ தனது நாட்டின் மருத்துவமனைகளுக்கு இலங்கை மதிப்பில் சுமார் 25 கோடி ரூபாவை நிதி யுதவியாக வழங்கியுள்ளார்.
ஐரோப்பிய நாடான போர்த்துக்கலில் கொரோனா தற்போது தீவிரமாகப் பரவ ஆரம்பித்துள்ளது. இதுவரை 4 ஆயி ரத்து 500 பேர் இந்த நோயால் பாதிக் கப்பட்டுள்ளனர். அவர்களில் 80 பேர் உயிரிழந்துள்ளனர். கொரோனாவுக்கு எதிரான நடவடிக்கைகள் போர்த்துக்க லில் முடுக்கி விடப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகளுக்காக போர்த்துக்கல் அரசு தன்னார்வலர்களிடம் இருந்து உதவிகளைக் கோரியுள்ளது. இந்த நிலையில், போர்த்துக்கல் கால்பந்தாட்ட அணியின் தலைவரான ரொனால்டோ இலங்கை மதிப்பில் சுமார் 25 கோடி ரூபாவை வழங்கியுள்ளார். (ம)




*கொரோனா நிவாரணத்துக்காக*

# நிதி திரட்டுகிறது பாரிஸ் செயின்ட்!

பாரிஸ், மார்ச் 29
கொரோனாவுக்கு நிதி திரட்டும் பணி களை முன்னெடுத்து வருகின்றது பிரான் ஸின் கால்பந்தாட்டக் கழகமான பாரிஸ் செயின்ட் ஜேர்மன்.
கொரோனாவுக்கு எதிரான உதவித் திட் டங்களுக்காக நிதி திரட்டும் பணியில் விளையாட்டுக் கழகங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் என்பன ஈடுபட்டு வருகின்றன. இந்த நிலையில் பிரான் ஸின் பாரிஸ் செயின்ட் ஜேர்மன் நிறுவனம் ஒன்லைனில் தனது ஜெர்சிகளை விற்று அதில் கிடைக்கும் பணத்தை கொரோனா வுக்கு எதிரான நடவடிக்கைகளுக்காகத் திரட்டி வருகின்றது. (ம)

# பெண்களுக்கான ஐ.பி.எல் அடுத்த ஆண்டு வேண்டும்

*மிதாலி கோரிக்கை*

புதுடெல்லி, மார்ச் 29
பெண்களுக்கான ஐ.பி.எல் தொடரை அடுத்த ஆண்டு தொடங்க வேண்டும். இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இதற்கான முன்னெடுப்புக்களை மேற் கொள்ள வேண்டும் என்ற கோரிக் கையை முன்வைத்துள்ளார் இந்திய மகளிர் அணியின் முன்னாள் தலைவர் மிதாலி.
ஐ.பி.எல் தொடர் தொடர்பில் மிதாலி ராஜ் மேலும் தெரிவித்ததாவது: பெண்கள் கிரிக்கெட்டை மேலும் வலுப்படுத்த பெண் களுக்கான ஐ.பி.எல் போட்டியை நடத்து வது குறித்து முடிவு செய்ய வேண்டிய சரியான தருணம் இதுவாகும். முதலில் சற்று சிறிய அளவில் இந்த போட்டியைத் தொடங்கலாம். தேவைப்பட்டால் விதிமு றைகளைக்கூட மாற்றம் செய்யலாம். ஆண்களுக்கான ஐ.பி.எல். போட்டியில் 4 வெளிநாட்டு வீரர்கள் களம் இறங்க அனுமதிக்கப்படுகிறார்கள். அதனை பெண்களுக்கான முதலாவது போட்டி யில் 5 அல்லது 6 வெளிநாட்டு வீராங்க னைகள் என்று முடிவு செய்யலாம் என் றார். (ம)




# ரி20 உலகக்கிண்ணத்துக்கு ஐ.பி.எல் உதவியிருக்கும்!

*ஜஸ்ரின் லாங்கர் தெரிவிப்பு*



சிட்னி, மார்ச் 29
ரி20 உலகக்கிண்ணத் தொடருக்கான தயார்ப்படுத்தலுக்கு ஐ.பி.எல் தொடர் உதவியிருக்கும். அது உரிய நேரத்தில் திட்டமி ட்டபடி நடைபெறா மல் போனமை துரதிஸ்டம் என்று தெரிவித்துள்ளார் ஜஸ்ரின் லாங்கர்.
ரி20 உலகக்கிண்ணத் தொடர் இந்த வருடம் ஆஸ் திரேலியாவில் இடம்பெற வுள்ளது. இந்தத் தொட ருக்கு முன்னதாக ஐ. பிஎல்லை நடத்தத் திட்ட மி டப்பட்டது. இன்று ஐ.பி.எல் தொடங்குவதாயிருந்தது. எனினும் கொரோனா அச் சம் காரணமாக திட்டமிட்ட திகதியில் தொடரை நடத்த முடியவில்லை. ஐ.பி.எல் இடம்பெ றாமை பலருக்கும் பெரும் அதிருப் தியை ஏற்படுத்தியுள்ளது. ஆஸ்திரேலிய அணியின் தலைமைப் பயிற்சியாளர் ஜஸ்ரின் லாங்கரும் இந்த விடயத்தில் தனது அதிருப்தியைத் தெரிவித்துள் ளார். ஜஸ்ரின் லாங்கர் மேலும் தெரிவித் ததாவது:
கொரோனா தொற்று ஏற்படுவதற்கு முன்பு, உண்மையாகவே எங்களுடைய வீரர்களை ஐபிஎல் தொடரில் விளையா டுவதற்கு அனுமதிக்கத் தீர்மானித்தி ருந்தோம். ஏனென்றால் ஐ.பி.எல் தொட ரைத் தொடர்ந்து ரி20 உலகக்கிண்ணம் வரவிருக்கிறது. உலகக்கிண்ணத் தொட ருக்காக இதைவிட சிறந்த பயிற்சி வேறெதுவும் இருக்க முடியாது. ஆனால் திடீரென எல்லா விடயங்களும் மிகப்பெரிய அளவில் மாறிவிட்டன - என்றார். (ம)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற் லிமிட்ரெட் நிறுவத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.03.2020இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.